# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:3 Issue : 11 July 2021*
கோட்டை :3 வாயில்:11 ஜூலை 2021

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

ISSN: 2582-399X

# Aran

International e Journal of Tamil Research

ISSN: 2582-399X



## ஆசிரியர் குழு

முனைவர் வாணிஅறிவாளன்
முனைவர் இராஜேந்திரன் முனியாண்டி
முனைவர் மணிமாறன் சுப்ரமணியம்
முனைவர் சில்லாழி எஸ்.கந்தசாமி
கலாநிதி ஸ்ரீவரதராஜன் பிரசாந்தன்
முனைவர் பா.வேலம்மாள்
முனைவர் விமலா அண்ணாதுரை
முனைவர் ஸ்வர்ணவேல் ஈஸ்வரன்
பேரா. முனைவர் வீ.செல்வகுமார்
முதுமுனைவர் V.வெங்கட்ராமன்
முனைவர் போ.கந்தசாமி
முனைவர் P.பாண்டிக்குமார்



நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

பேரா. முனைவர் பிரியாகிருஷ்ணன்

+917299587879

www.aranejournal.com

aranjournal@gmail.com


அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.


Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

# நன்றி

அனைவருக்கும் வணக்கம்

நமது அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ் மூன்றாவது ஆண்டில் (2021) அடி எடுத்து வைக்கின்றது. எங்களுடன் பயணித்த அனைத்து பேராசிரியர் பெருமக்களுக்கும், துறைசார் வல்லுநர்களுக்கும், ஆய்வு மாணவர்களுக்கும் எங்களது பணிவான நன்றியை தெரிவித்துக்கின்றோம். தொடர்ந்து உங்களது ஆதரவை எங்களுக்கு நல்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.நன்றியும் பேரன்பும்.

*Hi everyone*

*Aran Internaitional e Journal of Tamil Research continuings way into third year(2021) . We area greatful to all the professors,academics and research students who travelled with us. We warmly request you to continue to support us . Thank you with Love.*


அன்புடன்

முனைவர். பிரியாகிருஷ்ணன்

நிறுவனர்/பதிப்பாசிரியர்/நிர்வாகஆசிரியர்,

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

*www.aranejournal.com*

*aranjournal@gmail.com*

*PH: +917299587879*

# அகத்தினுள்

**பத்துப்பாடல்கள் சுட்டும் இசைக் கருவிகள்**
திரு. மதி ஜனனி செந்தூரன்

**குறுந்தொகையில் உவமைச் சிறப்பு**
முனைவர் மு. விஜயலெட்சுமி,

**குறுந்தொகைக் காட்டும் தகையணங் குறுத்தல்**
முனைவர் த.தேவகி

**தமிழரின் கடல் எல்லை தாண்டுதலும், பெண்கடல் செலவு மறுப்பும்**
முனைவர் இரா. ஜெயஸ்ரீ

**கம்பன் விருத்தங்களில்யாப்பு**
முனைவர். ஜெ. கவிதா.

**சிலப்பதிகாரம் காட்டும் சமூகம்**
முனைவர். ரா. ராமேஸ்வரி

**திருக்குறள் காட்டும் பகைவெறி எதிர்ப்பியல் சிந்தனைகள்**
திருமதி சு.சத்யா

**ஆசாரக் கோவையும் அறிவியலும்**
முனைவர் பெ.இராஜலட்சுமி

**ஏலாதி கூறும் வாழ்வியல் அறங்கள்**
முனைவர் க.அலமேலுமங்கை

**அணி இலக்கண நோக்கில் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்**
திருமதி.பா.தீபா

**விவிலியமும் சித்தர் இலக்கியமும் கூறும் மனித படைப்பு**
ச.சு.அருள்பிரகாஷ்

**இயேசு பிறப்புக் கதைப்பாடல்கள்**
தா.மதன்

முகப்பு
புகைப்படம் இணையம்
நன்றி

# அகத்தினுள்


**முகம் மலர்தலே விருந்தோம்பலின் முதன்மைப் பண்பு**
முனைவர் க. மங்கையர்க்கரசி

**சிற்பங்கள் காட்டும் கொற்றவை வழிபாடு**
கி. சரவணன்

**கைவல்ய நவநீதத்தில் பிரம்மம் பற்றிய கருத்தியல்கள்**
முனைவர் சயனொளிபவன். முகுந்தன்

**ஞானசம் பந்தரின் வருகையும் திட்டக் குடியும்**
முனைவர் பெ.சுப்ரமணியன்

**இந்துப் பண்பாட்டு மரபில் பெண்கள் நிலை-வடமொழி நூல்களை அடிப்படையாகக் கொண்ட நோக்கு**
கலாநிதி விக்னேஸ் வரிபவநேசன்

**உள்ள வழிபாடுகளே உருவ வழிபாடுகள்**
மு.பெருமாள்

**பிடுங்கி நடப்பட்ட நிலத்தில் முளைக்கத்துடிக்கும் உயிர்ப்பின் பச்சை.. (புகலிடக் கவிதைகளின் செல்தடம் குறித்த ஆய்வு**
பேரா.தெ.வெற்றிச்செல்வன்

**டாக்டர்தா.ஏ.ஞா. அவர்களின் இலக்கியத் திறனாய்வியல் நூலின் ஓட்பநுட்பங்கள்**
முனைவர் வே. விக்னேசு

**நெடுங் குருதி நாவல் காட்டும் களவும் கள்வர்வாழ்வும்**
முனைவர் அ.ரேவதி.

**ஜெயமோகனின் நாவற்கோட்பாட்டு விதிகளும், அவருடைய நாவல்களும் (ஜெயமோகனின் 'நாவல்' இலக்கியத்தினை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு)**
முருகையா சதீஸ்



முகப்பு
புகைப்படம் இணையம்
நன்றி

# அகத்தினுள்


**தமிழ் நாவல் இலக்கிய வரலாற்றில் கமலாம்பாள் சரித்திரத்தின் முக்கியத்துவம்**
முருகையா சதீஸ்

**தூப்புக்காரி நாவலும் கதைமாந்தர்களும்**
வினோ ராஜ். லா

**இலக்கியங்கள் முன்னெடுக்கும் பொதுமக்கள் நுகர்வுப் போக்கு**
முனைவர் ப. கிருஷ்ணமூர்த்தி.

**தமிழ் மொழி: கற்றலின் தேவையும் கற்பித்தலில் சிக்கலும் - சிலவிவாதங்கள்**
முனைவர் அ.இலட்சுமிதத்தை.

**அழகர் குறவஞ்சியில் இயல் இசைச் சிறப்புகள்**
முனைவர் செ.லலிதாம்பாள்

**சீவகசிந்தாமணி-நடன நோக்கில் விமலியார் இலம்பகம்**
முனைவர் ஜி.ஜே. லீமாரோஸ்

**சிலப்பதிகாரம் கூறும் விலக்குறுப்பும் நடன வடிவமைப்பும்**
முனைவர் கு.சகாயராணி

**THE GREAT EXHIBITION OF THE INDUSTRY AND ART OF ALL NATIONS (LONDON, 1851)**
Dr. S. Purushothaman

**உடுமலை பீரங்கி வார இதழ் - ஓர் ஆய்வு**
முனைவர் ப. கற்பகவள்ளி

**சங்ககாலம் - சேலம் மாவட்டம் ஒருபார்வை**
முனைவர் இரா.ரமேஷ்

**உயிருடன் புதைக்கப்பட்டப் பெண்கள் -தாமரைப் பாக்கம் கல் வெட்டுகள் முன் வைத்து மீள்பதிவு**
முனைவர் பிரியாகிருஷ்ணன்


முகப்பு

புகைப்படம் இணையம்

நன்றி



# தமிழ்

# ஞானசம்பந்தரின் வருகையும் திட்டக்குடியும்

முனைவர் பெ.சுப்ரமணியன்
கௌரவ விரிவுரையாளர்,
தமிழ்த்துறை,
திருவள்ளுவர் பல்கலைக்கழக கலை ம்றறும் அறிவியல் கல்லூரி,
திட்டக்குடி - 606106

**ஆய்வுச்சுருக்கம்**

பண்டைத் தமிழ் மக்களின் பண்பாடு பற்றிய ஆராய்ச்சிகளில் முக்கியமாக திகழ்வதே மானுடவியல் ஆராய்ச்சி. அதனுள் ஒருகூறு திருக்கோவில் பற்றிய ஆராய்ச்சியாகும். திருக்கோவில்கள் தோன்றிய வரலாறு, புராணம், அக்கோவிலில் உள்ள சிற்பக்கலை, வார்ப்புக்கலை, இசைக்கலை, நடனக்கலை, ஓவியக்கலை போன்றவை நாட்டு மக்களின் பண்பாட்டு கருவுலமாகத் திகழ்ந்து வருவதைக் காணலாம். இந்த எண்ணத்தில் தோன்றியதே இவ்வாய்வு ஆகும்.

திட்டக்குடி வட்டாரத்தில் எழுந்தருளியுள்ள சைவத் திருக்கோவிலின் வரலாறு, கோவில்களின் அமைப்பு முறை, வழிபாட்டுமுறை, அக்கோவில்களின் நடைபெறும் விழாக்கள் ஆகியவற்றை ஆராய்ந்து வெளிப்படுத்த வேண்டும் என்பதற்காகவே,

அறம் போதிக்கும் அறிவுக்களஞ்சியமாகத் திகழும் திருக்கோவில்களுக்கு அதனைச் சுற்றி வாழும் சமுதாயத்திற்கும் இடையேயுள்ள தொடர்பினை அறிந்து கொள்ளவும், திருக்கோவில்களின் மீது மக்கள் கொண்டுள்ள ஈடுபாடு, வழிபாட்டு முறைகள், மக்கள் தெய்வங்களின் மீது கொண்டுள்ள நம்பிக்கைகள் ஆகியவற்றை மக்களுக்குத் தெரியப்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

**திறவுச் சொற்கள்**: திருஞானம்பந்தர்,திட்டக்குடி,சைவம், சிவபெருமான்,திருத்தலங்கள்.

**முன்னுரை**

திருஞானசம்பந்தர் நடுநாட்டுத் திருத்தலங்களுக்குச் சென்று வழிபாடு மேற்கொண்டு பதிகங்களை அருளிச் செய்துள்ளார். அவ்வகையில் இவ்வட்டத்தில் திருவட்டத்துறைக்கு வந்து 11 பதிகம் பாடியுள்ளார். மேலும், இத்தலத்திற்கு வந்ததினால் முத்து பல்லாக்கு, முத்துக்குடை, முத்து சீவிகையைப் பெற்று இறைவனை வழிபட்டுள்ளார். நடுநாட்டின் 22 திருத்தலங்களில் திட்டக்குடி வட்டாரத்தில் திருவட்டத்துறையில்,

"துங்கவட யிலாய முதலா ஐந்து துள ஒன்று
தொண்டை வடநாடு எண்ணான்கு
தங்கு நடுநாடு இருபத்திரண்டு பொன்னித்தலம் நூற்றித்
தெண்ணூற்று தலைநாட்டு ஒன்று
கொங்கேழு சிங்களத்தில் இரண்டு வைகைகொழி தமிழ்நாட்டு
ஈரேழு முதலாற் சூலச்

செங்கையார் தலம் இருநூற்று எழுபா நான்கு"[1]

என 274 தலங்கள் உள்ளதாக அறிய முடிகிறது. மேலும் புதிதாக இரு தலங்கள் கிடைத்துள்ளன. இவையும் சேர்த்து 276 தலங்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. அவ்வகையில் சைவ நெறி பரப்ப திருஞானசம்பந்தர் நடுநாட்டுத் திருத்தலங்களான திட்டக்குடி வட்டாரத்தில் அமைந்த திருவட்டத்துறைக்கு வந்து வழிபாடு செய்து 11 பதிகம் பாடியுள்ளார்.

திருஅரத்துறையான திருக்கோவில்

திட்டக்குடிக்கும், பெண்ணாகடத்திற்கும் இடையில் 6 கி.மீ தூரத்தில் கொடிக்களம் என்னும் ஊரில் இருந்து தெற்கே 2 கி.மீ தொலைவில் வெள்ளாற்றங்கரையில் அமைந்துள்ளது திருவட்டத்துறை இங்கு அமைந்திருக்கும் திருக்கோயிலை திருஅரத்துறையான் திருக்கோவில் என்றும், தீர்த்தபுரீஸ்வரர் திருக்கோவில் என்றும் அழைப்பர்.

**புராணச்செய்தி**

திருக்கோவில்களில் பாடல்கள் பாடிய திருவள்ளுவர் முதலிய எழுவரை ஈன்ற கலைமகள் அவதாரமாகிய ஆதி என்பாள் தன் நீசத்துவம் நீங்கி முக்தியடைந்ததால் திருவட்டத்துறையே தீர்த்தத்தலமாக அழைக்கின்றார்கள்.

முன்னொரு காலத்தில் வாயு பகவானுக்கும், ஆதிசேஷனுக்கும் தங்களில் யார் வல்லமை படைத்தவர் என்பது குறித்து கடும் போட்டி ஏற்பட்டது. அப்போது ஆதிசேஷன் "மேருமலையைச்" சுற்றி வளைத்து இறுகப் பற்றிக்கொண்டான். உனக்கு வல்லமை இருந்தால் என் பிடியிலிருந்து இம்மலையைப் பெயர்த்து எடு என்று வாயு பகவானை நோக்கி கூறினார். தனது முழு வலிமையைப் பயன்படுத்தியும் கூட, மேருமலையை அசைக்க முடியாததால் நாரதமுனி உதவியை நாடினார் வாயுபகவான். நாரமுனி வாயுபகவானுக்கு உதவும் எண்ணத்தோடு தன் கையிலிருந்த "மஹதீ" என்ற வீணையைக் கொண்டு தேவகானம் இசைத்தார். இனிய இசையால் மனதைப் பறிகொடுத்த ஆதிசேஷன் ஒரு கணப்பொழுது தன் பிடியைத் தளர்த்தினான். இதனை எதிர்பார்த்து விழிப்புடன் காத்திருந்த வாயு பகவான் சீறிப் பாய்ந்து மேருமலையைப் பெயர்த்து விட்டார். செய்தறியாது திகைத்த ஆதிசேஷன் சினம்கொண்டு வாயு பகவானை வென்றே தீர வேண்டும் என்ற எண்ணம் மேலோங்க தென்திசை நோக்கி புறப்பட்டு "நீவாநிதி" என்று அழைக்கப்படும் புண்ணிய நதியான வெள்ளாங்கரையில் இறைவன் எழுந்தருள கடும்தவம் கொண்டார்.

ஆதிசேஷன் தவத்தின் விளைவால் ஏற்பட்ட வெப்பம் தாங்காமல் துன்பப்பட்ட தேவர்கள் கைலைக்குச் சென்று சிவபெருமானிடம் முறையிட்டனர். தேவ ரிஷிகளைக் காக்கவும்,ஆதிசேஷனுக்கு அருளவும் திருவுள்ளம் கொண்ட எம்பெருமான், அன்னை பார்வதிதேவியுடன் ஆதிசேஷனுக்குக் காட்சி தந்து அருள்மழை பொழிந்தார் என்று இத்தலச் சிறப்பினைக் கூறுவர்.

''ஐயனின் திருக்காட்சியைத் தரிசித்து, சினம் தனிந்த ஆதிசேஷன் தான் தரிசனம் பெற்ற இவ்விடத்தில் தன்னுடைய பெயர் நிலைத்திருக்க அருள்பாலிக்க வேண்டி வரம் கேட்டார். அதற்கு இணங்க, ஆதிசேஷனின் தவ வலிமையைக் கண்டு மனம் மகிழ்ந்த ஈசனும் இத்தலத்திற்கு 'அரவத்துறை' என்னும் நாமத்தை அருளினார்''[2] (அரவன் + துறை). இறைவனிடம் அருளைப்பெற தவம் செய்த போது இப்பகுதி வெப்பமானதால், இத்தலத்தின் மேல் கருடன் வலம் வராது.

''அரவம்'' என்னும் ஆதிசேஷன், தவம் செய்த இடம் வெள்ளாற்றங்கரையோரமான துறை. ஆகையால், அரவன் + துறை = அரவத்துறை என பெரியோர்களால் அழைக்கப்பட்டது.[2]

இது, பிற்காலத்தில் நெல் பயிர்கள் சூழ்ந்த பசுமையின் காரணமாக, திருநெல்வாயில் என்றும் அழைக்கப்பட்டது. தற்பொழுது திருவட்டத்துறை என்று அழைக்கின்றனர். திருஞானசம்பந்தர் இரண்டு பெயரையும் சேர்த்துப் பாடியிருப்பதைக் காணமுடிகிறது.

இத்தலத்து இறைவனை ஆனந்தீஸ்வரர், அரத்துறைநாதர், தீர்த்தபுரீஸ்வரர் என்றும் அம்பிகையை ஆனந்நாயகி, அறத்துறை நாயகி, திரிபுரசுந்தரி என்றும் அழைத்து வழிபடுகின்றனர். கர்வம் கொண்டு வரும் அனைவரையும் தன் முக அழகினால் மனமாற்றம் அடையச் செய்யும் வண்ணம் தாயார் முகம் அழகுடையது. புன்சிரிப்புடன் காணப்படும் தாயாரைக் கண்டவுடன் அமைதி நிலைக்கச் செய்கின்றாள் என்பது இத்தலச் சிறப்பாகும்.[3]

**வரலாற்றுச் செய்தி**

''ஆதிசேஷனுக்கு ஆடவல்லான் திருக்காட்சி தந்ததால் மனம் மகிழ்ந்த வால்மீகி மகரிஷி இத்தலத்தில் தங்கியிருந்து வழிபாடுகள் மேற்கொண்டார். அப்போது சூரிய குல மன்னனான திருபுனச் சக்கரவர்த்தி திருத்தலங்கள் தோறும் யாத்திரை மேற்கொண்டு, வழிபட்டு வந்தபோது திருவட்டத்துறை வந்தார். வால்மீகி மகரிஷியின் மூலம் இத்தலத்து ஈசனின் பெருமைகளைக் கேட்டறிந்து, அகம் மகிழ்ந்து பொன்னையும், பொருளையும் அள்ளித்தந்து இவ்விறைவனுக்கு கி.பி.630ல் திருக்கோவில் எழுப்பி திருப்பணிச் செய்துள்ளார்''. [4].

இத்தலத்து பெருமைப் பலருக்கு உணர்த்தியதால் வால்மீகி ரிஷிக்கு தனிச்சன்னதி உள்ளதைக் காண முடிகிறது.

இவரைத் தொடர்ந்து தமிழகத்தைச் சிறப்பாக ஆட்சிச் செய்து வந்த சேர, சோழ, பாண்டிய மன்னர்கள், சைவ நெறி தழைத்தோங்க தங்களை ஈடுபடுத்திக் கொண்டனர். இதனால் இவர்கள் பெயராலேயே ஆத்மார்த்த மூர்த்திகளாக சேரலிங்கம், சோழலிங்கம், பாண்டியலிங்கம் என மூன்று லிங்க திருமேனிகளை இக்கோவிலின் உள் சுற்றுப்புறத்தில் மேற்கு திசையில் எழுந்தருளச் செய்துள்ளார்கள். எந்தந்த மன்னர்கள் என்ற குறிப்பு இல்லாததால் பொதுப் பெயராலே சூட்டியுள்ளார்கள்.

**பதிகங்கள் மூலம் அறியும் செய்திகள்**

இத்தலத்து இறைவன் மீது திருஞானசம்பந்தர் 11 பதிகங்கள் பாடியுள்ளார். இத்தகு சிறப்பு கொண்ட இக்கோவில் பெருமையினைக் கீழ்க்கண்ட திருஞானசம்பந்தா் பாடல் மூலம் அறிய முடியகிறது.

“எந்தை ஈசன்எம் பெருமான் ஏறமா்
கடவுள் என்று ஏத்தச்
சிந்தை செய்வார்க்கெல்லாற்
சென்று கைகூடுவதென்றால்
கந்த மாமலருந்திக் கடும்புனல்
நீவா மல்கு கரைமேல்
அந்தண் சோனால நெல்வாயில்
அரத்துறையடிகள் தம் அருளே”[5]

திருஞானசம்பந்தா் நெல்வாயில் அரத்துறையானை வழிபட நடைபயணமாக வந்தபோது அவரது பாத மலா்கள் சிவந்து, புண்ணாகி நடக்க இயலாமல் துன்பப்பட்டார்.

சம்மந்தரின் வருத்தத்தைப் போக்க திருவுள்ளம் கொண்ட எம்பெருமான். அன்றிரவு அரத்துறையில் உள்ள அந்தணா்கள் அனைவரின் கனவிலும் தோன்றி “எமது குழந்தை ஞானசம்பந்தன் ” வருகின்றான். நீங்கள் முத்துக்குடை முத்துசீவிகை, முத்துபல்லாக்கு ஆகியவற்றை எடுத்துச்சென்று வரவேற்று வாருங்கள் என்றருளினார். மறுநாள் காலை திருக்கதவு திறக்க, கனவில் கூறியது போல் மூன்றும் இருப்பதை கண்டு வியந்து போனார்கள். இறைவனின் எல்லையற்ற கருணையை எண்ணி, மனம் உருகினார்கள்.

திருஞானசம்பந்தரின் கனவிலும் உமையொருபாகன் தோன்றி உனது திருத்தொண்டு தடைபடாமல் இருக்க யாம் உனக்கு அளித்தருளும் சீவிகை, பல்லாக்கு, குடை, முதலியவற்றை ஏற்றுக்கொள்வாயாக எனத் திருவாய் மலர்ந்தருளினார். சம்பந்தரும் ஈசனின் கருணையை நினைத்து நினைத்து மனமுருகி பாடல்கள் பாடி துதித்தார்.[6]

பஞ்சாட்சர மந்திரத்தை ஓதியப்படி சீவிகையில் அமா்ந்து திருக்கோவிலுக்குச் சென்று வழிபட்டு, இறைவன் மேல் 11 பதிகங்கள் பாடி இறைவனின் அருளைப் பெற்றார்.

தலச்சிறப்புச் செய்திகள்

சூரிய குடும்பத்தில் அங்கம் வசிக்கும்செவ்வாய். சனி கிரகங்கள் ஒரு சமயத்தில் ஏற்பட்ட வினைப் பயனால் சூரிய சந்திரங்களின் சாபத்தினைப் பெற நேரிட்டது.

செவ்வாயும், சனியும் பிரம்ம தேவனை அணுகி சாப விமோசனத்திற்கு வழிகூறி அருளும்படி வேண்டினர். பிரம்மதேவனும் அவா்களின் நிலையைக் கண்டு மனம் இரங்கி புலோகத்திற்குச் சென்று அரத்துறை ஈசனை நோக்கி தவம் இயற்றுமாறு வழி கூறியருளினார். அவ்வாறு செவ்வாயும், சனியும் நீவா நதியில் நீராடி கடுந்தவம்

புரிந்தார்கள். தவத்தினால் மகிழ்ந்தத இறைவன் அவர்களுக்கு காட்சி கொடுத்து அவர்களது துன்பத்தை நீக்கி அருள்புரிந்தார்"[7]

குறைதீர்த்த செவ்வாயும், சனியும் பல்லாண்டு காலங்கள் இத்தலத்து ஈசனை வணங்கி மகிழ்ந்தார்கள், செவ்வாய் தோஷம் காரணமாக நீண்ட நாட்களாகத் திருமணமாகாமல் உள்ளவர்கள் இத்தலத்து ஈசனை வழிபடுவதன் மூலம் நல்லதெரு வாழ்க்கைத் துணை அமையப்பெறறு வளம் பெறுவார்கள் என நம்புகின்றனர், அஷ்டமச்சனி, ஏழரைச்சனியின் ஆதிக்கத்தால் துன்பப்படுபவார்கள். இத்தலத்தில் வந்து முறைப்படி வழிபாடு செய்தால், சனி பகவானுக்கு ஏற்பட்ட இன்னல்களைக் களைத்தது போல் பக்தர்களின் இன்னல்களையும் தீர்த்து தடுத்தாட்கொள்வது பலரும் அனுபவத்தில் கண்ட உண்மையாகும். சனி பகவானுக்கு இங்கே தனி சன்னதி உள்ளது.

**சிறந்த வழிபாட்டுத் தலம்**

முத்துச்சிவிகை பெற்ற சம்பந்தர் இத்தலத்தில் ஈசனை வணங்கி தந்தையாக ஏற்றுக்கொண்டதால் இங்கு வழிபாடு செய்பவர்கள் மூதாதையர்களின் ஆசிகளைப் பெறுகின்றனர். இங்கு நடைபெறும் மாசிமகப் பெருவிழாவில் பத்தாம் நாள் தீர்த்தபுரீஸ்வரர் வெள்ளாற்றில் தீர்த்தவாரி நடத்தி, மூதாதையர்களின் பாவங்களைப் போக்கி முக்தியளித்தார். இன்றும் மாசிமகத்தின் போது வெள்ளாங்கரையில் ஏராளமானோர் மூதாதையர்களை வணங்கி புசை செய்து அளவிட முடியாத புண்ணியத்தைப் பெறுகின்றனர்.

"நீண்ட நாட்களாக உடல்நலிவு ஏற்பட்டவர்கள், தீராத நோய்களால் அவதிப்படுபவர்கள் வெள்ளாற்றில் புனித நீராடி தீர்த்தபுரீஸ்வரரை வணங்கினால் உடல்நலிவு நீங்கப்பெற்று மன நிம்மதி பெறுவார்கள்".[8]

**திருக்கோயில் அமைப்பு**

நான்கு ஏக்கர் சுற்றளவில் இத்திருக்கோவில் அமைந்துள்ளது. கிழக்கு கோபுரம் மட்டும் தான் உள்ளது. கோபுரத்திலிருந்து உள்ளே சென்றவுடன் வலது புறத்தில் தாயார் சன்னதி உள்ளது.

ஆனந்தநாயகி, திரிபுரசுந்தரி என்ற திருநாமத்துடன் காட்சியளித்து அருள்பாலிக்கின்றாள். கருவறையில் தாயார் தென்திசையைப் பார்த்தவாறு நின்ற நிலையில் ஆனந்தக்காட்சி அளிக்கிறாள்.

கருவறையில் அரத்துறையான சதாசிவ வடிவில் கிழக்கு நோக்கி பக்தர்களுக்கு அருள்புரிகிறார். இந்த வடிவம் சுமார் இரண்டடி உயரம் இருக்கும்.

**நந்தி**

பொதுவாக சைவ திருக்கோவில்களில் நந்திதேவர் இறைவனை நோக்கியவாறு அமைந்திருப்பார். ஆனால் இத்தலத்தில் நந்திதேவர் சற்று தெற்கு பார்த்தவாறு காணப்படுகிறார். "ஊழிக்காலத்தில் வெள்ளம் பெருக்கெடுத்து வரும்போது தேவர்களும், முனிவர்களும் அரத்துறையானை வணங்க, வரும் பேரழிவில் இருந்து எங்களைக் காப்பாற்ற வேண்டும் என்று வேண்டி கேட்டுக்கொண்டதின் காரணமாக

நந்தி தேவருக்கு அரத்துறையார் இட்ட கட்டளையின்ப "நீரை" உட்கொண்டார் என்பது புராணச் சான்று"[9]

**வழிபாடும்-திருவிழாக்களும்**

திருவட்டத்துறை திருக்கோவிலில் தினபுசைகள் நான்கு வேளையும் நடைபெறுகின்றன. பிரதோஷம், அமாவாசை, கிருத்திகை போன்ற சிறப்பு வழிபாடுகளும் நடைபெறுகின்றன.

**மாசிமகத் திருவிழா**

ஆண்டுதோறும் மாசித் திங்களில் 10 நாட்கள் விழா நடைபெறும். இதனை மாசிமகப் பெருவிழா என்பர்.

**நந்தவனம்**

திருக்கோவிலின் புசைக்கான மலர்களுக்குரிய மரங்கள், நத்தவனத்தில் வளர்க்கப்படுகின்றன். புசைக்குரிய மலர்கள் தொடுக்க தனிநபர் நியமனம் செய்துள்ளார்கள். இங்கு,

1. நாகலிங்கம் 10
2. மனோரஞ்சிரதம் 11
3. பின்ன மரம் அதிகமாக உள்ளன.

நாகலிங்கம் G+வினை இறைவனின் பாதத்தில் வைத்து வீட்டுக்கு எடுத்துவரும்போது சூனியம் விலகும் என நம்புகின்றனர்.

**தலமரம்**

இக்கோவிலின் தலமரம் ஆல் ஆகும். இது காசியில் இருக்கும் ஆலமரத்தைவிட சிறப்புடையது. இறந்தவர்களுக்குத் தர்ப்பணம் செய்யும் போது ஆல இலையை வைத்து செய்தால் புண்ணியம். இன்று இக்கோவில் எதிரே காணப்படும் மரம் மூன்றாவது தலைமுறையாகும்.

இத்திருக்கோவிலின் சிறப்பு

ஆனந்தீஸ்வரரை அரவம் வணங்கி, வலிமைப் பெற்றதால் இங்கு வாழும்மக்களை இன்றுவரை அரவம் தீண்டியதில்லை.

செவ்வாய் தோஷம் நீங்க வழிபாடு செய்யும் கோவில்.

சனி பகவானால் துன்பப்பட்டவர்களின் துயரம் நீங்க, நீவா நதியில் நீராடிசனி பகவானை வணங்கி, தீர்த்தபுரிஸ்வரை வணங்கினால், சனியின்பாதிப்பு நீங்கும்.

கருடன் திருத்தலத்தின் மேல் வலம் வராது.

**முடிவுரை**

திருவட்டத்துறையில் திருஞானசம்பத்தர்பாடல்கள் பாடி அருளும் பெற்றுள்ளர்கள். இன்று திருவட்டத்துறை என்றும் அழைக்கும் இவ்வுர் ஆதிகாலத்தில் நெல்வாயில் என அழைக்கப்பட்டது. அதற்கு காரணம் நெற்பயிர்கள் சூழந்த பயிர்கள் மத்தியில் தீர்த்தப்புரிஸ்வரர் எழுந்தருளினார். சேர, சோழ, பாண்டிய மன்னர்கள்

*திருவட்டத்துறையில் ஆகும். வாயும் பகவானை மீண்டும் வெல்ல வலிமைபெற வேண்டி அரவம் தவம்கொண்ட இடம் திருவட்டத்துறையாகும். இதனால் இவ்T+ர் திருஅரவத்துறை என பெயர் பெற்றது. திருஞானசம்மந்தரின் வருகையை உணர்ந்த ஈசன், சம்பந்தரின் பாதம் நோகாமல் இருக்க முத்துப் பல்லாக்கு, குடை, சீவிகை ஆகியவை வழங்கப்பட்ட இ்டம் இதுவே ஆகும். மாசி மக விழா பெரும் சிறப்போடு கொண்டாடப்படுகிறது. அன்று இறந்தவர்களுக்கு "திதி" கொடுக்கும் நாளாகவும் அந்நாள் கொள்ளப்படுகிறது.*

அடிக்குறிப்பு

1. கோவில் ஜெயராமன், *1998, சீர்மீகு* திருக்கோயில், *பாவை* பதிப்பகம்,திருக்கோவிலூர், *ப - 7*
2. *குமரன், 1950, திருக்கோயில வரலாறு திருவட்டத்துறை, முருகன் அச்சகம், பெண்ணாடம், ப - 2*
3. *மேலது, ப - 12*
4. *மேலது, ப - 22*
5. *மேலது, ப - 6*
6. *ராஜகோபலன் ஏ.எம், 2006, குமுதம் சோதிடம், குமுதம் பப்ளிகேசன்ஸ், சென்னை, ப - 2*
7. *செந்துறை முத்து, 1976, திருக்கோவில் வழிபாடு, மணிவாசகர் பதிப்பகம் சென்னை, ப - 70*
8. *செந்துறை முத்து, 1976, திருக்கோவில் வழிபாடு, மணிவாசகர் பதிப்பகம் சென்னை, ப - 43*
9. *சேக்கிழார், 1974, பெரியபுராணம், குமரகுருபரன் சங்கம், ப - 223*

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
ARAN International e-Journal of Tamil Research

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

ISSN: 2582-399X


## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

ஆண்டு 2021, அக்டோபர் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் அக்டோபர் - 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜனவரி இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.


www.aranejournal.com

✉ aranjournal@gmail.com

✆ 72995 87879